செ.வெ. எண்: 446 நாள்: 29.07.2012

# செய்தி வெளியீடு

ஒரு நாட்டின் செழுமை, அந்த நாட்டினுடைய இளைஞர்களின் பண்பினாலும், அவர்கள் பெறும் வெற்றிகளினாலும் அளவிடப்படுகிறது. கல்வியில் மேன்மை, விளையாட்டுப் போட்டிகளில் திறமை ஆகிய இரண்டும் இளைஞர் சமுதாயத்திற்கு இன்றியமையாதது. இப்படிப்பட்ட அறிவார்ந்த ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

விளையாட்டு விடுதிகள் துவக்குதல், தினப் பயிற்சி திட்டத்தின் மூலம் வீரர்களுக்கு முழுமையான பயிற்சி அளித்தல், பன்னாட்டு போட்டிகளில் பங்கு கொள்வதற்காக பன்னாட்டுத் தரத்தில் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல், விளையாட்டு வீரர்கள் பன்னாட்டு போட்டிகளில் பங்கு கொள்வதை ஊக்குவிக்கும் விதமாக ஊக்கத் தொகை வழங்குதல், உள் விளையாட்டு அரங்கங்களை அமைத்தல் போன்ற எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில் கோயம்புத்தூரிலுள்ள நேரு விளையாட்டரங்கில் பகல் இரவு நேர போட்டிகள் நடத்துவதற்கு ஏதுவாக 1 கோடியே 56 லட்சம் ரூபாய் செலவில் 4 உயர்மட்டக் கோபுர மின்னொளி மின்கம்பங்கள் அமைக்கவும், மின் அமைப்பு வசதிகளை சீரமைக்கவும், 2 புதிய 75 KVA டீசல் ஜெனரேட்டர்கள் பொருத்தவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதில் 50 விழுக்காடு தொகை அரசு மானியமாகவும், மீதமுள்ள தொகை விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நிதியிலிருந்தும் செலவிடப்படும்.

பல்வேறு விளையாட்டுகளுக்கு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் மாநில அளவில் போட்டிகள் நடத்தி முதலமைச்சர் கோப்பை வழங்குவது போல, பூப்பந்து விளையாட்டிற்கும் மாநில அளவில் போட்டிகள் நடத்தி முதலமைச்சர் கோப்பை வழங்க 10 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கிடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்ளும் வகையில் பயிற்சி அளிப்பதற்கு நல்ல திறமையான பயிற்றுநர்களை நியமிக்கும் வண்ணம், தற்பொழுதுள்ள 139 பயிற்றுநர் பணியிடங்களுடன் மேலும் 80 புதிய பயிற்றுநர் பதவிகளை தோற்றுவிப்பதற்கும் மற்றும் இப்பயிற்றுநர்களை மாதம் 8000 ரூபாய் ஊதியத்தில் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்திடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 76 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், விளையாட்டு வளாகம், நீச்சல் குளம் மற்றும் உள் விளையாட்டு அரங்கம் போன்ற விளையாட்டுத் துறைக்குத் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றிடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அந்த வகையில் நாமக்கல் மற்றும் திருவள்ளூர் ஆகிய இரு இடங்களில் சர்வதேச தரத்திலான நவீன நீச்சல் குளம் அமைக்க தலா ஒரு கோடி ரூபாய், அதாவது மொத்தம் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள், தமிழகத்திலிருந்து அனைத்து விளையாட்டுகளிலும் சிறந்த விளையாட்டு வீரர்கள் உருவாவதற்கு வழி வகை செய்யும்.

*****

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள் :- 29.7.2012.